வளர்ச்சிக் குழுமம் பரிசீலித்து, பரிசீலனைக்குப் பின் அங்கே பொது உபயோகத்திற்கான போதுமான இடங்கள் இருப்பது தெரிய வந்தால் அதற்குப் பிறகு அனுமதி அளிப்பது சட்டத்திற்கு உட்பட்டு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 12, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

12—

புரசைவாக்கம் தொகுதி ஓட்டேரி குடிசைவாழ் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா.

*10021—திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புரசைவாக்கம் தொகுதி ஓட்டேரி பகுதியில் பல ஆண்டு காலமாக குடிசை வீடுகளில் வாழ்ந்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா இதுநாள் வரை வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பட்டா வழங்க குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வாரியத்தினுடைய விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 30, 40 ஆண்டுகளாக சென்னை நகரில் ஓட்டேரி பகுதி பள்ளப் பகுதியாக இருக்கிறது. பல வருடங்களாகக் குடிசைகளைக் கட்டி அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் குடிசைகளை எல்லாம் சிமெண்ட் ஓடுகள் போட்ட வீடுகளாக மாற்றினார்கள். அந்தத் திட்டம் என்ன ஆனது? மீண்டும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா? அல்லது 30 ஆண்டுகளாகப் பட்டா இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிற ஏழை, பாமர, அரிசன மக்களுக்குப் பட்டா வழங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

1993 அக்டோபர் 26]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டம், புரசை, பெரம்பூர் வட்டம், ஓட்டேரி பகுதியில் திடீர் நகர், சிவசண்முகபுரம் '-ஏ'' பிளாக், மற்றும் 'பி'' பிளாக், ஓட்டேரி நல்லாங்கரை, ப்ருக்ளின் ரோடு ஆகிய பகுதிகளில் குடிசைப் பகுதிகள் அமைந்திருக்கின்றன. இந்தக் குடிசைப் பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகளைச் செய்து முடித்துள்ளது. குறிப்பாக திடீர் நகர்ப் பகுதியில் மொத்தமுள்ள 102 மனைகளிலே 55 மனைகளைக் குடியிருப்புக்காக ஒதுக்கீடு செய்து குத்தகை மற்றும் ஒப்பந்தப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதைப் போல சிவசண்முகபுரம் பகுதியில் மொத்தமுள்ள 734 மனைகளில் 438 மனைகள் குடியிருப்போருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு குத்தகை மற்றும் ஒப்பந்தப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மீதி உள்ளவர்களுக்கு, அவர்கள் குடிசைப் பகுதி மாற்று வாரிய விதிகளுக்கு உட்பட்டு நிலக்கிரயம் முதலியன செலுத்த மூன் வராத காரணத்தால் இன்னும் அவர்களுக்கு மனைகள் ஒதுக்கீடு செய்ய உத்தரவிடப்படவில்லை. மேற்கூறிய குடிசைப் பகுதியைச் சேர்ந்த நிலங்கள் சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து வாரியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டவுடன் மனை ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்படும். அதைப் போல நல்லாங்கரை பகுதியில் இருக்கிறவர்கள் கரை ஓரங்களில் இருக்கிற காரணத்தாலே அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 13, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்

13—

துறையூரில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை.

*19102—திரு. வி. ரவிச்சந்திரன் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதியில் துறையூர் நகரில் சிட்கோ மூலமாக தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவுக்கு பதில் சொல்வதற்கு முன்பு எங்களுடைய இதய தெய்வம்